இருக்கக்கூடிய பல கிராமங்களிலிருந்து கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவம் பெற மூன்று பேருந்துகளில் மாறி மாறி நல்லூர் அல்லது சிறுமங்கலத்திற்குச் சென்று வருகின்றனர். இந்தச் சிரமத்தைப் போக்கும் வகையில், நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழக்குறிச்சி கிராமத்தினைச் சுற்றி பல குக்கிராமங்கள் இருக்கின்ற காரணத்தினால், அங்குள்ள மக்கள் பயன்பெறும் வகையில், கீழக்குறிச்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைப் புதியதாகத் துவங்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கீழக்குறிச்சியில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று ஏற்கெனவே என்னிடத்தில் வலியுறுத்தியுள்ளார். அரசு அதைக் கனிவோடு ஆய்வு செய்து பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

127—

உலர்களம்

***27421—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, M. புதுப்பட்டி பேரூராட்சியில் உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2019 ஜூலை 17

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, M. புதுப்பட்டி கிராமத்தில் உலர்களம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்த மனித தெய்வமாய், தமிழகத்தின் காவல் தெய்வமாய், ஏழைகளின் இதய தெய்வமாய் வாழ்ந்து, தமிழக மக்களுக்காக எண்ணற்ற பல நலத் திட்டங்களைத் தீட்டி, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனங்களைவிட்டு மறையாத, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கும் மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா எனும் தெய்வத்தை முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு தமிழக மக்களுக்காக நல்ல பல திட்டங்களை விதி 110–ன்கீழ் நாள்தோறும் வாரி வழங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானம் காக்கும் ஆடைகளை நெய்யும் நெசவாளர்களை ஊக்குவிக்கும்விதமாகவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்த விலையில்லா வேட்டி சேலை மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடைகளை நெய்யும் கைத்தறி, பெடல்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு அகவிலைப்படி மற்றும் கூலியினை உயர்த்தி வழங்கி நெசவாளர்கள் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றிய, நெசவாளர்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களுக்கு என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிவாழ் மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, M. புதுப்பட்டி பேரூராட்சியில் உள்ள மக்கள் அதிக அளவு விவசாயம் செய்து வருகிறார்கள். இவர்கள் பயறு வகைகள், எள் மற்றும் தானிய வகைகளை அதிக அளவில் பயிர் செய்து வருகிறார்கள். இவர்கள் விளைய வைக்கும் விவசாயப் பொருட்களை உலர வைப்பதற்கும், அதனைப் பிரித்தெடுப்பதற்கும் உலர்களம் இல்லாததால், தார்ச் சாலையை உலர்களமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இது போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறாக உள்ளது. எனவே, இப்பகுதியில் போதிய இட வசதி உள்ளதால், M. புதுப்பட்டி மற்றும் இப்பகுதி விவசாய மக்களின் கோரிக்கையினை ஏற்று, M. புதுப்பட்டி பேரூராட்சியில் ஓர் உலர்களம் அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் 22 உலர்களங்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. M. புதுப்பட்டியிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ள நெடுங்குளம் கிராமத்தில் உள்ள உலர்களத்தினை விவசாயிகள் பயன்படுத்தலாம். மேலும், அவசியத்தின்

அடிப்படையில் M. புதுப்பட்டியில் பேரூராட்சிமூலம் இடம் கிடைக்கும்பட்சத்தில், அதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உலர்களம் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

முற்பகல் 10—50

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இடத்தில் கூடிய விரைவில் ஓர் உலர்களம் அமைத்துத்தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், மகாராஜபுரம் கிராமத்தில் விவசாயப் பொருட்கள் வைப்பதற்கு ஒரு சேமிப்புக் கிடங்கும், அதுமட்டுமல்லாமல், அதே பகுதியில் ஓர் உலர்களமும் அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 11 விற்பனைக்கூடங்கள் இருக்கின்றன. அங்கே தேவையான அளவிற்கு உலர்களங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, தேவைப்படுமாயின், அங்கு அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், நெல் விளைச்சல்

அதிகமுள்ள மாவட்டம். இங்கு உலர்களங்கள் அமைப்பதற்கு பல ஊராட்சிகளில் இடமில்லாமல் இருக்கிறது. இப்போது எப்படி அரிசி ஆலைகளிலே அப்படியே உலர வைக்கிறார்களோ, அதேபோன்று நம்முடைய டெல்டா பகுதிகளிலெல்லாம் உலர்களங்கள் அமைக்கப்பட்டால், மழைக் காலங்களில் மழையினால் பாதிக்கப்படாமல் அங்கு நெல்லினைக் காய வைக்கக்கூடிய நிலை ஏற்படும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 31 மாவட்டங்களில் சுமார் 1,827 உலர்களங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேவையான இடங்களிலெல்லாம் ஆராய்ந்து, விவசாயிகளுடைய நலனைக் கருதி, அங்கே இருக்கின்ற விவசாய உற்பத்திக்கேற்ப உலர்களங்கள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

சுற்றுலாத் தலம்

***1339—திரு. மு. திராவிடமணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூடலூர் தொகுதி, பொன்னூரிலுள்ள வாசனை திரவியப் பூங்காவை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கூடலூர் தொகுதி, பொன்னூரிலுள்ள வாசனை திரவியப் பூங்காவை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று பேரவை சட்டமன்ற உறுப்பினர்